மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

செவிலியர் கல்லூரி

***1278—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியில் செவிலியர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி அருகில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் தற்போது 50 இருக்கைகளுடன் அரசு செவிலியர் கல்லூரியும், 100 இருக்கைகளுடன் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியும், பக்கத்தில் இருக்கிற இன்னொரு மாவட்டமான கடலூரில் 50 இருக்கைகளுடன் செவிலியர் பள்ளியும் செயல்பட்டு வருவதால், உடனடியாக கள்ளக்குறிச்சியில் புதிய செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சாதனையாக தமிழகத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளை ஒரே ஆண்டில் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொண்டு வந்து பெருமை சேர்த்தார். அதன் தொடர்ச்சியாக, சங்கராபுரம், ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் ஆகிய 5 தொகுதிகளை உள்ளடக்கிய கள்ளக்குறிச்சி மாவட்டம் மிகவும்*

2022 ஏப்ரல் 8]

பின்தங்கிய மாவட்டம் என்பதால் எங்கள் பகுதிக்கு ஒரு செவிலியர் கல்லூரி அவசியம் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய தமிழகத்தின் முதல்வராக இருந்த மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாக வந்த மருத்துவக் கல்லூரிகள்தான் அந்த 11 மருத்துவக் கல்லூரிகள் என்பதைத் தொடர்ந்து பலமுறை நான் இந்த அவையில் பதிவு செய்திருக்கிறேன். என்றாலுங்கூட, சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்காக ஒரு தகவல். தமிழகத்தைப் பொறுத்தவரையில்* Diploma in Nursing *25 இடங்களிலும்,* B.Sc. (Nursing) *6 இடங்களிலும்* Post Basic (B.Sc. Nursing) *2 இடங்களிலும்,* M.Sc. (Nursing) *3 இடங்களிலும் என மொத்தம் 36 கல்லூரிகள் இருக்கின்றன. இதன்மூலம் 2,621 இருக்கைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் 21 மாவட்டங்களில் மட்டுமே இந்தப் பயிற்சிக் கல்லூரிகள் இருப்பதால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப, விடுபட்ட பிற மாவட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்தை வெளிப்படுத்துவதுபோலவும், அமல்படுத்துவதுபோலவும், மாவட்டத்திற்கு ஒரு செவிலியர் கல்லூரி என்கின்ற வகையில் எதிர்காலத்தில் இந்தப் பயிற்சிக் கல்லூரிகள் கொண்டு வரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டம் என்பதால், அந்தப் பகுதிக்கு*

B. Pharm, D. Pharm. போன்ற Pharmacy படிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், 21 மாவட்டங்களில் 36 கல்லூரிகள் இருக்கின்றன. மீதமுள்ள மாவட்டங்களிலும் இதுபோன்ற கல்லூரிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.

திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி கடந்த 10 ஆண்டுக் காலமாக கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவக் கல்லூரிக்கான இடத்தை முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் திரு. ஆ. ராசா அவர்கள், ஆண்டிமுத்து சின்னபிள்ளை அறக்கட்டளையின் மூலமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்கு Dean ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த 10 ஆண்டுக் காலமாக கிடப்பில் போடப்பட்டிருக்கும் அந்தத் திட்டத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டே கொண்டுவருவதற்கு பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வணக்கத்திற்குரிய தமிழகத்தின் முதல்வர் அவர்கள், எங்களை டெல்லியில் ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து இதுசம்பந்தமான கோரிக்கையை விடுக்கச் செய்தார்கள்.

2022 ஏப்ரல் 8]

அந்த வகையில், பெரம்பலூர், ராணிப்பேட்டை, மயிலாடுதுறை, திருப்பத்தூர், தென்காசி, காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைய வேண்டியதன் அவசியத்தை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயம் வரும் என்று எதிர்பார்த்தும் இருக்கிறோம்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியத்திற்குட்பட்ட அரசு பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மையம் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிதாக பிரேத பரிசோதனை மையம் கட்டித் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளில் எங்கேயெல்லாம் அந்த மருத்துவமனைகளுக்கான கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றனவோ அவற்றுக்கெல்லாம் 15–வது நிதி ஆணையத்தின்படி இந்த ஆண்டு 800 கோடி ரூபாய்க்கும் மேலான செலவில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில், ஏற்காடு தொகுதிக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*